**செப்டம்பர் – 29**

# TNPSC துளிகள்

- ❖ ஸ்பெயினின் பதின்ம வயது கால்பந்தாட்ட வீரரான பார்சிலோனா அணியினைச் சேர்ந்த லாமின் யமாலை விட 300 புள்ளிகளுக்கு மேல் முன்னிலை பெற்ற பிரான்சின் உஸ்மேன் டெம்பேலே 2025 ஆம் ஆண்டிற்கான பேலன் டி 'ஓர் விருதை வென்றுள்ளார்.
- ❖ இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமிதா சௌத்ரி, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் நிதி சார் முன்னெடுப்பின் (UNEP FI) நிலையான காப்பீட்டுக்கான கொள்கைகளின் (PSI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ○ இந்த உலகளாவியப் பதவியை வகிக்கும் முதல் இந்திய வம்சாவளி பெண் இவரே ஆவார்.
- ❖ பிரதமரால் துவங்கி வைக்கப்பட உள்ள உலக உணவு இந்தியா 2025 நிகழ்ச்சியானது புது டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## அலை ஓதப் பகுதிகளிலான சதுப்புநில நாற்றுப் பண்ணை





- ❖ கடலூர் மாவட்டத்தில் உள்ள பிச்சாவரம் அருகே உள்ள கிள்ளையில் அலை ஓதப் பகுதிகளிலான சதுப்புநில நாற்றுப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது.
- ❖ சுமார் மூன்று லட்சம் மரக்கன்றுகளைக் கொண்டுள்ள இந்த நாற்றுப் பண்ணையானது தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள முதல் நாற்றுப் பண்ணையாகும்.
- ❖ இங்கு அவிசென்னியா மரினா, அவிசென்னியா அஃபிசினாலிஸ், ரைசோபோரா முக்ரோனாட்டா மற்றும் ரைசோபோரா அபிகுலாட்டா ஆகிய நான்கு இனங்கள் வளர்க்கப் படுகின்றன.
- ❖ இந்த முன்னெடுப்பானது, பசுமைத் தமிழ்நாடு திட்டம் மற்றும் தமிழ்நாடு கடலோர மறு சீரமைப்புத் திட்டம் (தமிழ்நாடு – நிலையான கடற்கரை மற்றும் வாழ்விட மறு சீரமைப்பு - TN-SHORE) ஆகியவற்றை ஆதரிக்கிறது.
- ❖ பிச்சாவரம் பகுதியில் பதின்மூன்று உண்மையான சதுப்புநில இனங்கள் காணப் படுவதால், இது நீண்டகால மறுசீரமைப்புத் திட்டங்களுக்குப் பயனளிக்கிறது.

## 1000க்கும் மேற்பட்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை


- ❖ சென்னையில் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (SMCH)

1,006 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- உயிருடன் உள்ள உறுப்புக் கொடையாளரின் மூலமாக, 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் SMCH மருத்துவமனையில் முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப் பட்டது.
- மொத்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளில், 837 உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் ஆனது உயிருடன் உள்ள பொருத்தமான உறுப்பு கொடையாளர்களிடம் இருந்தும், 169 உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் ஆனது இறந்த உறுப்புக் கொடையாளர்களிடமிருந்தும் செய்யப்பட்டன.




## கொடைக்கானலின் பெருங்கற்கால கல் திட்டை




- கொடைக்கானலில் உள்ள 5,000 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கல் திட்டைகள், முதன்முதலில் 1900 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் கிறித்துவ சமயப் பரப்பாளர்களால் ஆய்வு செய்யப்பட்டன.
- கல் திட்டைகள் ஆனது பெரும்பாலும் பாறை முகடுகள் அல்லது இயற்கையான பாறை அமைப்புகளுக்கு அருகிலுள்ள சரிவுகளில் சீர்ப்படுத்தப் படாத கற்களைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்டன.

- கிறித்துவப் பாதிரியாளர்களால் பதிவு செய்யப்பட்ட கல் திட்டைகளில் 50 சதவீதத்திற்கும் குறைவானவையே தற்போது நன்கு புலப்படும் வகையிலும் மற்றும் சேதமடையாமலும் அப்படியே உள்ளன.
- பெருமாள் மலைக்கு அருகிலுள்ள பேத்துப்பாறையில், சில கல் திட்டைகள் இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்தினால் (ASI) வேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப் படுகின்றன.
- தாண்டிக்குடியில் பல கல் திட்டைகள் தாவரப் பரவலால் மறைந்துவிட்டன அல்லது காலப் போக்கில் சேதமடைந்துள்ளன.
- மருதநதி ஆற்றின் அருகே நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் அப்பகுதியில் இரும்பு காலத்திற்கு முந்தைய தொடர்ச்சியான ஆக்கிரமிப்பை வெளிப்படுத்தின.
- 40 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்த புதைவிடத்தில் கருப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்கள் மற்றும் சிவப்பு நிறப் பவள மணிகள் போன்ற கலைப்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டன.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் மாசுபட்ட நதித் தளங்கள்




- இந்தியாவில் குளிப்பதற்குத் தகுதியற்ற நதிப் பகுதிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 815 ஆக இருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டில் 807 ஆகக் குறைந்துள்ளது என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) தெரிவித்துள்ளது.
- லிட்டருக்கு 30 மி.கி என்ற அளவிற்கு மேலான உயிரிய உயிரிவளி/ஆக்ஸிஜன் தேவை (BOD) கொண்ட முன்னுரிமை 1 ஆக வகைப்படுத்தப்பட்ட 'மிகவும் மாசுபட்ட' நதிப் பகுதிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 45 ஆக இருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டில் அதன் எண்ணிக்கை 37 ஆகக் குறைந்தது.
- 2023 ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவில் அதிக மாசுபட்ட நதிப் பகுதிகள் (54) இருந்தன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து கேரளா (31), மத்தியப் பிரதேசம் (18), மற்றும் மணிப்பூர் (18) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- அவசரச் சீரமைப்பு தேவைப்படும் முன்னுரிமை 1 நதிப் பகுதிகளின் அதிகபட்ச எண்ணிக்கை (தலா ஐந்து) தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் பதிவாகியுள்ளன.
- இந்தியா முழுவதும் உள்ள ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்கள்

உள்ளிட்ட 4,736 இடங்களில் உள்ள நீர் தரத்தை CPCB கண்காணிக்கிறது.

## 2025-26 LPG இணைப்புகள்

- 2025-26 ஆம் நிதியாண்டில் பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY) திட்டத்தின் கீழ் 25 லட்சம் புதிய LPG இணைப்புகளை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தப் பெண்களுக்கு எரிவாயு இணைப்பிற்கான முதல் கட்ட இணைப்பு அல்லது முதல் நிரப்புதலுக்கான கட்டணம் வசூலிக்காமல் LPG இணைப்புகளை வழங்குவதை PMUY நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PMUY திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மொத்த LPG இணைப்புகள் சமீபத்திய விநியோகத்திற்குப் பிறகு 10.58 கோடியை எட்டும்.




## விக்சித் பாரத் கட்டமைப்பு 2025



- மத்தியக் கல்வி அமைச்சகமானது, பள்ளி மாணவர்களுக்கான நாடு தழுவிய அளவிலான புத்தாக்கச் சவாலான விக்ஸித் பாரத் பில்டத்தான் 2025 என்ற நிகழ்ச்சியினைத் தொடங்கியது.
- இந்த நிகழ்வானது அடல் புத்தாக்கத் திட்டம், நிதி ஆயோக் மற்றும் AICTE ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த பில்டத்தான் நிகழ்ச்சியானது உள்ளூர் மக்களுக்கான குரல் கொடுத்தல், ஆத்ம நிர்பர் பாரத், சுதேசி மற்றும் சம்ரிதி ஆகிய நான்கு கருத்துருக்களைச் சார்ந்து புதுமைகளை உருவாக்க மாணவர்களை ஊக்குவிக்கிறது.
- இது அடிமட்டத்திலான புத்தாக்கக் கலாச்சாரத்தை வளர்ப்பதையும், இளைஞர்களை சுயசார்பு மற்றும் வளமான இந்தியாவின் இயக்கிகளாக மாறுவதற்கான அதிகாரம் அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஓஜு நீர்மின் நிலையம்





- 2,220 மெகாவாட் திறன் கொண்ட ஓஜு நீர்மின் நிலையத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை வழங்க மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.
- இது சீன எல்லைக்கு அருகிலுள்ள டாக்சிங்கில் உள்ள சுபன்சிரி ஆற்றில் கட்டமைக்கப் பட திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது சுபன்சிரி நதிப் படுகையில் உள்ள நீர்மின் நிலையங்களில் மிகப்பெரிய ஆற்றல் உற்பத்தித் திறன் கொண்ட நிலையமாகும்.
- இது சுபன்சிரி நதியின் மேல் மட்ட மாவட்டத்தில் உள்ள ரெடி கிராமத்தில், நதியின் கீழ் நோக்கிய ஓட்டத்தில் 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

## DRAVYA வலை தளம்


- DRAVYA வலை தளமானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதியன்று தேசிய

ஆயுர்வேத தினத்தன்று தொடங்கப்பட்டது.

- ❖ இது ஆயுர்வேதப் பொருட்கள் மற்றும் தயாரிப்புகளின் மிகப் பெரிய தரவுத்தளமாகும்.
- ❖ DRAVYA என்பது ஆயுஷ் பொருட்களின் பல்துறை அளவுருவிற்கான டிஜிட்டல் மீட்டெடுப்புச் செயலி என்பதைக் குறிக்கிறது.
- ❖ இது பாரம்பரிய ஆயுர்வேத பாடப் புத்தகங்கள், சமகால அறிவியல் இலக்கியங்கள் மற்றும் கள ஆய்வுகளிலிருந்து தரவை எளிதாக அணுக உதவுகிறது.
- ❖ ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இது மாணவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அந்தத் துறையில் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு விரிவான வளமாக செயல் படுகிறது.




## முப்படை இராணுவ தலைமைத் தளபதியின் பதவிக்காலம் நீட்டிப்பு





- ❖ முப்படை இராணுவ தலைமைத் தளபதியாக உள்ள ஜெனரல் அனில் சௌகானின் பதவிக் காலத்தினை நீட்டிக்க அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்தது.
- ❖ 2026 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதி வரை அல்லது மறு உத்தரவு வரும் வரை இந்திய அரசின் இராணுவ விவகாரத் துறையின் செயலாளராகவும் அவர் தொடர்ந்து பணியாற்றுவார்.

- ஆரம்பத்தில், ஜெனரல் சௌகான் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் தேதியன்று முப்படை இராணுவத் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

# சர்வதேசச் செய்திகள்

## பாரம்பரிய மருத்துவத்தின் உலகளாவியப் பரவல்




- பாரம்பரிய மருத்துவ முறையானது, பில்லியன் கணக்கானவர்களுக்கு முதன்மை சுகாதாரப் பராமரிப்பாகச் செயல்படுவதுடன் உலக சுகாதார அமைப்பின் (WHO) 194 உறுப்பினர் நாடுகளுள் 170 நாடுகளில் நடைமுறையில் உள்ளது.
- 10% முதல் 20% வரையிலான வருடாந்திர வளர்ச்சியுடன் உலகளாவியப் பாரம்பரிய மருத்துவச் சந்தையானது, 2025 ஆம் ஆண்டிற்குள் 583 பில்லியன் டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆயுர்வேதமானது பல நாடுகளில் ஒரு மருத்துவ முறையாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளதுடன், இந்தியா 1.54 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஆயுஷ் மற்றும் மூலிகைப் பொருட்களை 150க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.
- தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (2022–23) ஆனது 95% கிராமப்புற மற்றும் 96% நகர்ப்புற மக்கள் AYUSH பற்றிய விழிப்புணர்வைக் கொண்டுள்ளதாக கூறியது என்ற நிலையில், அதற்கு முந்தைய ஆண்டில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் அந்த மருத்துவத்தினைப் பயன்படுத்தினர்.
- இந்தியா 25 இருதரப்பு AYUSH ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது மற்றும் 39 நாடுகளில் 43 AYUSH தகவல் மையங்களையும், வெளிநாடுகளில் 15 கல்வி சார் இருக்கைகளையும் அமைத்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## GST மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்


- மத்திய நிதி அமைச்சகமானது புது டெல்லியில் சரக்கு மற்றும் சேவை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தினைத் (GSTAT) தொடங்கியுள்ளது.

- GSTAT ஆனது தொழில்நுட்ப ஈடுபாடுகளற்ற முடிவுகள், எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்கள், டிஜிட்டல் முறையிலான வரித் தாக்கல்கள், மெய்நிகர் விசாரணைகள் மற்றும் வழக்கு கையாளுதலுக்கான கடுமையான காலக்கெடுவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பணப்புழக்கத்தை மேம்படுத்தவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர் நம்பிக்கையை அதிகரிக்கவும் சட்ட ரீதியான குறைபாடுகளைக் குறைக்கவும், செயல்முறைகளை எளிதாக்கவும், வழக்குத் தாமதங்களை நிவர்த்தி செய்யவும் இந்த தீர்ப்பாயம் முயலும்.
- இயங்கலை வழி மேல்முறையீட்டுத் தாக்கல், வழக்கு கண்காணிப்பு மற்றும் டிஜிட்டல் விசாரணைகளைச் செயல்படுத்துவதற்காக GSTAT இணைய நீதிமன்ற வலை தளம் வெளியிடப்பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அச்சனக்மர் புலிகள் வளங்காப்பகம்




- ஜும்ரி புலியானது பந்தவ்கரில் இருந்து கொண்டு வரப்பட்ட பிறகு, அச்சனக்மர் புலிகள் வளங்காப்பகத்தில் (சத்தீஸ்கர்) 2022 ஆம் ஆண்டில் 5 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் 18 ஆக உயர்ந்தது.
- பிலாஸ்பூரில் அமைந்துள்ள அச்சனக்மர் புலிகள் வளங்காப்பகம், 1975 ஆம் ஆண்டில் வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டில் புலிகள் வளங் காப்பகமாக மாற்றப்பட்டது.
- இது அச்சனக்மர்–அமர்கந்தக் உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒரு பகுதியாகும்.

- இது கன்ஹா மற்றும் பந்தவ்கர் புலிகள் வளங்காப்பகங்களுக்கு இடையேயான ஒரு முக்கிய வழித் தடமாகச் செயல்படுகிறது.
- இந்தக் காப்பகத்தில் பைகா (எளிதில் பாதிக்கப்படக் கூடியப் பழங்குடியினர் குழு), கோண்ட் மற்றும் யாதவ் போன்ற பழங்குடியினச் சமூகங்கள் வசிக்கின்றனர்.

### இம்பேஷியன்ஸ் செல்வசிங்கி





- கர்நாடகாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் குத்ரேமுக் மலைத் தொடரில் ஒரு புதிய தாவர இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பேராசிரியர் P. செல்வ சிங் ரிச்சர்டு, இனப்பெருக்க உயிரியலுக்கு ஆற்றியப் பங்களிப்புகளுக்காக அவரைக் கௌரவிக்கும் வகையில் இதற்கு ‘இம்பேஷியன்ஸ் செல்வ சிங்கி’ என்று பெயரிடப்பட்டது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் 130 பூர்வீக இனங்களுடன் 280க்கும் மேற்பட்ட இம்பேஷியன்ஸ் வகைகள் இந்தியாவில் காணப் படுகின்றன என்பதோடு மேலும் இவற்றில் சுமார் 80% அருகி வரும் இனங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உற்பத்தி இடைவெளி அறிக்கை 2025

- ஸ்டாக்ஹோம் சுற்றுச்சூழல் நிறுவனம் ஆனது, பருவநிலைப் பகுப்பாய்வு மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான சர்வதேச நிறுவனம் ஆகியவை இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது, உலக வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்சியஸ் வரம்பில் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் அதிக புதைபடிவ எரிபொருட்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளன என்பதை அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- வெப்பமயமாதலை 1.5°C ஆகக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, 2030 ஆம் ஆண்டிற்குள் 120% அதிக புதைபடிவ எரிபொருட்களை உற்பத்தி செய்ய அரசாங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

- திட்டமிடப்பட்ட நிலக்கரி உற்பத்தியானது 2030 ஆம் ஆண்டிற்குள் பருவநிலைக்கு ஏற்ற அளவை விட 500% அதிகமாக இருக்கும், அதே நேரத்தில் எண்ணெய் உற்பத்தி 31% மற்றும் எரிவாயு உற்பத்தி 92% அதிகமாக இருக்கும்.
- நிலக்கரி உற்பத்தியானது 2035 ஆம் ஆண்டிற்குள் உயரும் என்றும் மேலும் எரிவாயு உற்பத்தி 2050 ஆம் ஆண்டு வரை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- கணக்கெடுப்பு செய்யப்பட்ட 20 முக்கியப் புதைபடிவ எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளுள், 17 நாடுகள் 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது ஒரு புதைபடிவ எரிபொருளின் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன.
- பருவநிலை இலக்குகள் இருந்தபோதிலும் எரிவாயு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை 13 நாடுகள் எதிர்பார்த்து வருகின்றன.
- 6 நாடுகள் மட்டுமே நிகரச் சுழிய உமிழ்வு இலக்குகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்திச் சூழல்களை உருவாக்கி வருகின்றன; மேலும் பெரும்பாலானவை சீரற்ற விரிவாக்கத் திட்டங்களையே தொடர்கின்றன.





# மாநிலச் செய்திகள்

## விசாகப்பட்டினம் பிரகடனம்



- ❖ விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 28வது தேசிய இணைய ஆளுகை மாநாடு (NCeG) விசாகப்பட்டினம் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் நிறைவடைந்தது.
- ❖ இந்த மாநாட்டை நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறை தீர்ப்புத் துறை (DARPG), மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) மற்றும் ஆந்திரப் பிரதேச அரசு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.
- ❖ BHASHINI மற்றும் டிஜி யாத்ரா போன்ற தளங்களைப் பயன்படுத்திச் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும், குடிமக்களை மையமாகக் கொண்ட மற்றும் பன்மொழியிலான டிஜிட்டல் சேவை வழங்கலுக்கு இது அழைப்பு விடுத்தது.
- ❖ SAMPADA 2.0, eKhata மற்றும் DAMS போன்ற வெற்றியடைந்த மாதிரிகள் முழு அரசாங்க அணுகுமுறையின் கீழ் நாடு தழுவிய பயன்பாட்டிற்காக முன்மொழியப்பட்டன.

### முக்கிய மந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா




- ❖ பீகார் மாநில அரசின் முக்கிய மந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா திட்டத்தினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தத் திட்டமானது பெண்கள் தங்கள் விருப்பப்படி சுயதொழில் முயற்சிகள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு ஆரம்ப மூலதனத்தை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ பீகார் முழுவதும் 75 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்குகளுக்கு தலா 10,000 ரூபாய் நேரடியாக அனுப்பப்பட்டது.
- ❖ பின்வரும் அமலாக்கக் கட்டங்களில் 2 லட்சம் ரூபாய் வரையில் கூடுதல் ஆதரவை அவர்கள் பெறுவார்கள்.

## விளையாட்டுச் செய்திகள்

### ஆசியக் கோப்பை கிரிக்கெட்2025

- ❖ பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா 2025 ஆசியக் கோப்பையை கோப்பையை வென்றது.
- ❖ இந்தப் போட்டி வரலாற்றில் இந்தியா கோப்பையை வெல்வது இது ஒன்பதாவது முறையாகும்.
- ❖ இலங்கை 6 முறையும், பாகிஸ்தான் இரண்டு முறையும் கோப்பையை வென்றுள்ளது.





# முக்கிய தினங்கள்

## உலக கடல்சார் தினம் 2025 - செப்டம்பர் 25

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது.
- உலகளாவிய வர்த்தகம், கலாச்சாரப் பரிமாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மையில் கப்பல் போக்குவரத்து வகிக்கும் இன்றியமையாதப் பங்கை அங்கீகரிக்க இது ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Our Ocean, Our Obligation, Our Opportunity" என்பதாகும்.




## உலக கருத்தடை தினம் 2025 - செப்டம்பர் 26



- குடும்பக் கட்டுப்பாடு மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்து தனி நபர்களுக்கு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்குப் பல்வேறு கருத்தடை விருப்பத் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், UNFPA அமைப்பினால் ஆதரிக்கப்பட்ட கருத்தடை முறைகள் 18 மில்லியன் எண்ணிக்கையிலான திட்டமிடப்படாத கர்ப்பங்களையும், 7.5 மில்லியன் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளையும், 39,000 பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகளையும் தடுத்தன.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "A choice for all. Freedom to plan, power to choose" என்பதாகும்.

## உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம் 2025 - செப்டம்பர் 26




- மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான உள்ளார்ந்தத் தொடர்பு குறித்த ஒரு சக்தி வாய்ந்த நினைவூட்டலாக இந்த நாள் செயல்படுகிறது.
- இத்தினமானது 2011 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் சர்வதேசச் சுற்றுச்சூழல் சுகாதாரக் கூட்டமைப்பினால் (IFEH) தொடங்கப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Clean Air, Healthy People" என்பதாகும்.

## சர்வதேச காது கேளாதோர் வாரம் 2025 - செப்டம்பர் 22/28




- உலக காது கேளாதோர் கூட்டமைப்பு ஆனது ஆண்டுதோறும் செப்டம்பர் 03 அல்லது அந்த மாதத்தின் கடைசி வாரத்தில் இத்தினத்தினைக் கொண்டாடுகிறது.
- இது காது கேளாதோர் உரிமைகளை ஆதரிப்பதில் சிறந்த நடவடிக்கைகளை

மேம்படுத்துகிறது மற்றும் காது கேளாதோர் மற்றும் அவர்களை ஆதரிப்பவர்களுக்கு இடையிலான ஒற்றுமையின் பிணைப்புகளை வலுப்படுத்துகிறது.

- 2025 ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “No Human Rights Without Sign Language Rights” என்பதாகும்.

## உலகச் சுற்றுலா தினம் 2025 - செப்டம்பர் 27




- சமூகங்கள், கலாச்சாரங்கள் மற்றும் பொருளாதாரங்களை வடிவமைப்பதில் சுற்றுலா / பயணம் வகிக்கும் முக்கியப் பங்கை இத்தினம் எடுத்துரைக்கிறது.
- இந்தத் தினமானது, 1970 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பின் சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டதை நினைவு கூருகிறது.
- இது 1980 ஆம் ஆண்டில் முதல் முறையாக கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Tourism and Sustainable Transformation' என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★